*19*

# இயேசுவின் ஊழியத்தில் கடைசி வாரம்

***1. பெத்தானியில் அபிஷேகம்*** *(மத். 26:6-13; மாற். 14:1-11; யோவா. 12:1-8).*—இயேசு, வெள்ளிக்கிழமை இரவு பெத்தானிக்கு வந்து சேர்ந்தார். அவர், பஸ்கா பண்டிகைக்குச் சென்ற திருப் பயணிகளின் திரளான கூட்டத்தாரின் மத்தியில் ஆர்வத்தின் மையப் பொருளாய் இருந்திருக்க வேண்டும். அவர்கள் நகரிலிருந்த தங்கள் நண்பர்களின் வீடுகளில் அல்லது ஒலிவ மலையின் சரிவுகளிலோ அல்லது கிதரோன் சமவெளியிலோ கூடாரம் அமைத்து தங்கச் சென்றிருக்கையில் அவர் நன்கறியப்பட்ட பெத்தானி இல்லத்தை நாடினார். எப்பொழுதுமே வரவேற்கப்படும் விருந்தினராய் இருந்த அவர் இப்பொழுது மும்முறை வரவேற்கப்படுபவராய் இருப்பார். ஓய்வுநாள் ஓய்ந்திருப்பதில் கடந்து சென்றிருக்கும்; ஆனால் தொழு நோயாளியாய் இருந்த சீமோனின் வீட்டில், அந்த இரவில், அவருக்கு மதிப்பளிக்கும் வகையில் ஒரு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. மரியாள், மார்த்தாள் மற்றும் லாசரு ஆகியோர் அங்கிருந்தனர், அவர்கள் உயிருடன் மீண்டும் எழுப்பப்பட்டிருந்த ஒருவரினிமித்தம் (லாசரு) அகம் மகிழ்ந்து, ஒருவர் மற்றவருடன் ஐக்கியத்தைப் புதுப்பித்து, இவற்றைத் தாங்கள் அதிகமாய்க் கடன்பட்டிருந்த ஒருவர் (இயேசு) முன்னிலையில் செய்தார்கள். ஆனால் ஒருத்தியினுடைய நன்றி உணர்வானது மென்மை யற்ற அல்லது சாதாரணமான வழிமுறைகளில் வெளிப்படுத்தப்பட முடியாதிருந்தது. இனியும் அவளால் தாங்கக் கூடாத வரைக்கும் கர்த்தரு டைய முகத்தை உற்று நோக்கி, அவருடைய கிருபையுள்ள வசனங்களைக் கவனித்துக் கேட்ட அவள் எழுந்தாள், ஒரு விலை உயர்ந்த தைலம் கொண்ட ஜாடி ஒன்றைக் கொண்டு வந்தாள், அதிலிருந்த தைலத்தை முதலில் அவரது தலையில் ஊற்றினாள், பின்பு அவர் (உணவு) மேசையில் சாய்ந்திருக்கையில் அத்தைலத்தை அவள் அவரது பாதங்களில் ஊற்றினாள். இப்பொழுது போலவே அப்பொழுதும் மென்மையற்ற பண்பு கொண்டிருந்த சில ஆத்து மாக்கள் இதனை ''விரயம்'' என்று கண்டனம் செய்தன(ர்); ஆனால் அன்பைத் தூண்டி விடுகிற இயேசுவுக்கு, இது விலைமதிப்பற்ற அன்பாக இருந்தது, "அவளை விட்டுவிடுங்கள் ஏன் அவளைத் தொந்தரவு படுத்து கிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியைச் செய்திருக்கிறாள் ... நான் அடக்கம் பண்ணப்படுவதற்கு எத்தனமாக, என் சரீரத்தில் தைலம் பூச முந்திக் கொண்டாள்."[1]

***2. ஞாயிற்றுக்கிழமை: வெற்றிகரமான பிரவேசம்*** *(மத். 21:1-17).— பஸ்கா பண்டிகையின்போது எருசலேம் நகரில், பலஸ்தீனத்தின் மற்றும் பேரரசின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து வந்திருந்த வெளியாட்களால் அதிக கூட்டம் இருந்தது, அவர்களில் பலர் அவரைக் குறித்துக் கேள்விப் பட்டிருந்தனர், அவர்களில் பெரும்பாலோர் அவர் உரைத்தவற்றைக் கேட்டிருந்தனர். பெரேயா பகுதியில் ஊழியம் மற்றும் லாசருவை உயிருடன் எழுப்பியது ஆகியவை ஒரு புறத்தில் பிரபலமாயிருந்து புகழ்ச்சியைப் புதிதாய் கொழுந்து விட்டெறியத் தூண்டிக் கொண்டிருக்கை யில், மறுபுறத்தில் வெறுப்பின் நெருப்புகளை வளர்த்துக் கொண்டிருந்தன. முடிவு சமீபித்துள்ளது; எனவே இயேசு இனியும் தவிர்க்க முடியாத போராட்டத்தை மூடி மறைத்து வைக்கவில்லை, ஆனால் மேசியாத் துவத்தை வெளிப்படையாகச் செயல்விளக்கப்படுத்துவதற்கு இணங்கு கின்றார். ஆனால் அவர் யுத்தத்தின் அடையாளமான குதிரைக்குப் பதிலாக சமாதானத்தின் அடையாளமான கழுதைக் குட்டியைத் தேர்ந்து கொண்டதின் மூலம் தமது ஆளுகையின் இயல்பைத் தெரியப்படுத்து கின்றார். அவர் ஒலிவ மலையின் உச்சியை அடைந்த வேளையில், நகரிலிருந்து வந்த திரளான கூட்டத்தார், பெத்தானியிலிருந்து அவருடன் வந்து கொண்டிருந்த திரளான கூட்டத்தாரைச் சந்தித்தார்கள்; மற்றும் அவர், சத்தங்களுடனும், ஓசன்னாக்களுடனும், வெற்றிகரமான செயல் விளக்கங்களுடனும் எருசலேமுக்குள் அழைத்துச் செல்லப்படுகின்றார். நகரம் முழுவதும் முரண்படும் உணர்வெழுச்சிகளினால் அதிர்ந்தது. அது ஒரு சுத்தமான மாகாணச் செயல் விளக்கமாயிருந்தது; ஒலிவ மலையிலிருந்து காட்சியில் தோன்றிய எருசலேமுக்காக அழுதிருந்தார், அந்நகரானது அமைதியாகத் தனித்து விடப்பட்டது அல்லது வெளிப்படையாக விமர்சனம் செய்யப்பட்டது. அந்நகரும் கூடத் தனது கர்த்தரை ஏற்றுக் கொண்டிருந்தால் என்ன என்று ஒருவர் கேட்காதிருக்க முடியாது. நாம் (அதற்கு) பதில் கூற(வும்) முடியாது. கடைசியில் புறக்கணித்தலே நடைபெற்றது என்பதை மட்டும் நாம் அறிகின்றோம். உற்சாகம் நிறைந்திருந்த சீஷர்கள் ஏமாற்றம் அடைந்தார்கள் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை. இயேசு, அவர்கள் எதிர்பார்த்து நம்பியிருந்த வகையில் மேசியாத்துவச் செயல்விளக்கத்தைப் பின்பற்றவில்லை; தேவாலயத்தில் இருந்த ஒவ்வொன்றைப் பற்றியும் ஆய்வு மட்டுமே செய்த பிறகு, அவர் இரவு வேளையில் தங்க பெத்தானிக்குத் திரும்பி வந்தார்.*

***3. திங்கட்கிழமை: காய்க்காத அத்திமரம்; தேவாலயத்தை இரண்டாம் முறை சுத்திகரித்தல்*** *(மத். 21:12, 13, 18, 19; மாற்கு 11:12-18).— திங்கட்கிழமை காலையில் நகருக்குச் செல்லும் வழியில் இயேசு ஒரு அற்புதத்தைச் செய்தார், அது ஒரு அற்புதமாகவும் மற்றும் உவமையாகவும் இருந்தது. காய்க்காத அத்தி மரமானது, வழக்கத்திற்கு மாறான தனது இலைகளின் பெருக்கத்தால் வழக்கத்திற்கு மாறான கனி நிறை தன்மை இருப்பதாக (தன்னை) உயர்த்திக் கொண்டிருந்தது. இயேசுவிடமிருந்து வந்த ஒரு வார்த்தையினால் அது அழிந்து போயிற்று: அழிவையே தங்கள் வீழ்ச்சியாகக் கொண்ட பொய்யான நகருக்கும் நாட்டுக்கும், அல்லது*

பொய்யான வாழ்வுக்கும் இது பொருத்தமான நினைவுச் சின்னமாக உள்ளது. இயேசு அதைக் கடந்து தேவாலயத்தில் நுழைகிறார் ஞாயிற்றுக்கிழமை அவர் (இயேசு) மேற்கொண்ட ஆராய்வின் தொடர் நிகழ்ச்சியாக அவர் அதை, தமது முதல் பஸ்காவில் சுத்திகரித்தது போன்றே மீண்டும் சுத்திகரிக்கின்றார். பிலிப்பும் அந்திரேயாவும் வரம் பெற்ற கிரேக்க நாட்டின் பிரதிநிதிகள் சிலரை இயேசுவினிடத்தில் அழைத்து வந்தது பற்றிய ஆர்வமுள்ள நிகழ்ச்சி யோவானால் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது (12:20-33). அவர் தாம் சிலுவையில் உயர்த்தப்பட்டிருக்கும் பொழுது எல்லா இனத்தவரும் தம்மை நோக்கி இழுக்கப்பட வேண்டிய ஒரு காலத்தை முன்னதாகவே கண்டார். அந்தப் பலியி(ன் காட்சியி)லிருந்து அவருடைய இதயம் பின்னிட்டது; ஆனால் “கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும்”[2] இவ்விதமாக கடைசி வரையிலும் இயேசு தம்முடைய இராஜ்யத்தின் இயல்பை முன் வைப்பதற்கு ஒவ்வொரு நிகழ்ச்சியையும் வாய்ப்பாகப் பற்றிக் கொண்டார். அவர் ஒரு அரசியல் புரட்சியை ஏற்படுத்தி பூமிக்குரிய பேரரசு ஒன்றை அமைப்பதைத் தேர்ந்து கொண்டிருந்தால் அதை அவர் ஒரு நாளிலேயே அமைத்திருக்கலாம்;[3] ஆனால் அந்தக் கேள்வி நீண்ட நாட்களுக்கு முன்பாகவே தீர்வு காணப்பட்டு விட்டது. மனிதரின் கிரீடமும் அவரது சொந்த கிரீடமும் சிலுவையின் வழியிலேயே வர வேண்டும்.

**4. செவ்வாய்க்கிழமை: கேள்விகளின் நாள்** (மத். 21:23-25:46).— இப்பொழுது நாம் இயேசுவின் வெளிப்படையான ஊழியத்தின் மாபெரும் கடைசி நாளுக்கு வந்துள்ளோம். இது மக்களிடத்தில் அவரது மதிப்பைக் குறைப்பதற்காக வடிவமைக்கப்பட்ட கேள்விகளுடன் தேவாலயத்தில் தொடங்குகின்றது: (1) ஆலோசனை சங்கத்தாரிடமிருந்து வந்த ஒரு குழுவினர் அவருடைய அதிகாரத்துவத்தைத் தொடுகின்றனர்; (2) வரி செலுத்துதல் பற்றி மீண்டும் பரிசேயர்களால்; (3) உயிர்த்தெழுதல் பற்றிச் சதுசேயர்களால்; (4) பெரிய கட்டளை பற்றி மீண்டும் பரிசேயர்களால்; (5) கிறிஸ்துவைப் பற்றி இயேசுவினாலேயே. இயேசு தமது தன்னிகரற்ற பதில்களில் உவமைகளின் மூன்றாம் தொகுதியைப் பின்னிப் பிணைக்கின்றார், அதாவது: இருமகன்கள், பொல்லாத குடியானவன், மற்றும் அரசருடைய மகனின் திருமணம். பிறகு தமது விரோதிகளிடம் திரும்பிய அவர், “வாழ்வு முழுக்க விமர்சனத்தை அடக்கி வைக்கும்'' ஒன்றை அவர்கள் மீது ஊற்றினார். “மாயக்காரராகிய வேத பாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ!”[4] என்ற அவரது ஏழு ஐயோக்களின் திண்மையும் வெம்மையுமான இடி முழுக்கங்கள் அவர்கள் மீது வீழ்ந்தன. அது அவர்களுக்குத் தகுதியானதாகவே இருந்தது; ஆனால் அது மரண அடியாய் இருந்தது என்பதை இயேசு அறிந்திருக்க வேண்டும். இதுமுதல் அவர் இரக்கத்தை எதிர்பார்த்திருக்க முடியாது. இயேசு தேவாலயத்தை விட்டு என்றென்றைக்குமாக வெளியே செல்லும் போது ஏழை விதவையின் இரண்டு காசுகளை (காணிக்கை செலுத்தியதை) அவர் பாராட்டியது என்பது கடைசி நிகழ்ச்சியாய் இருந்தது. மாபெரும் சாபத்தின் முடிவைத் தொடர்ந்து வந்த இந்த அழகிய நிகழ்ச்சி பனிப் பாறையின் நடுவில் பாரிஜாத மலர் போன்று காணப்படுகின்றது.

*அவர் பன்னிருவருடன் கடந்து சென்று, ஒலிவ மலையின் சரிவில் நகரத்தின் தேவாலயத்தை நோக்கியவாறு அமர்ந்தார். அங்கு மாபெரும் தேவாலயக் கற்கள் பற்றிய ஒரு சீஷரின் குறிப்புரைக்கும், தமது இரண்டாம் வருகை பற்றிய ஒரு கேள்விக்கும் பதிலுரையாக அவர் எருசலேமின் அழிவு மற்றும் தமது இரண்டாம் வருகை பற்றிய உரையை நிகழ்த்தினார். அவ்வுரை எல்லாவற்றினுடைய பாடமாக உள்ளது, "விழித்திருங்கள், தயாராயிருங்கள், உங்கள் வாய்ப்புக்களைக் காத்துக் கொள்ளுங்கள்" என்பதேயாகும். இவற்றை அவர் பத்துக் கன்னிகைகள் மற்றும் தாலந்துகள் ஆகியவற்றின் உவமைகளினால் வலுப்படுத்தினார். பிறகு நியாயத்தீர்ப்பு பற்றி மத்தேயு 25ல் பதிவு செய்யப்பட்டுள்ள மென்மையான சித்தரிப்பு தொடருகின்றது.*

*இவ்விதமாக இயேசுவின் வெளிப்படையான ஊழியத்தின் மாபெரும் கடைசி நாளானது நிகழ்ச்சியிலும் போதனையிலும் முழுமையானதாகவும் பல்வகைப்பட்டதாகவும் நடந்து முடிகின்றது. இயேசு தமது சீஷர்களுடன் ஒரு சில நிமிடங்கள் நடந்து சென்று, பெத்தானியின் அமைதியான பாதுகாப்பான பகுதியில் மீண்டும் ஒருமுறை ஓய்வு கொண்டார்.*

*ஆனால் அவரது எதிரிகள் அவ்விதமாக அந்த நாளைத் தங்களுக்குள் முடிக்கவில்லை. அந்தரங்கமாய் நடந்த இரகசியக் கூட்டத்தில் அவர்கள், முதலாவது அவர் சாக வேண்டும் என்றும், இரண்டாவது அவரைக் கொலை செய்யும் நிகழ்ச்சி பண்டிகையின் போது நடைபெறலாகாது என்றும் முடிவு செய்தனர்; ஏனெனில் அவர்கள் மாய்மாலக்காரர்களாய் இருந்தது போன்றே, கோழைகளாகவும் இருந்தனர், நட்புறவான கூட்டங்களின் முன்னிலையில் அவர்மீது கை வைக்க அவர்கள் துணியவில்லை.[5]*

*இப்பொழுது நாம், வரலாற்றின் புதிர்களில் ஒன்றைச் சந்திக்கின்றோம். சரியான வேளையில் பன்னிருவருக்குள் ஒரு சீஷனாயிருந்தவனும், இயேசுவின் பயணங்கள் மற்றும் தங்கும் இடங்கள் பற்றி அறிபவனுமாயிருந்த யூதாஸ் பணத்துக்காகத் தனது எஜமானரைக் காட்டிக் கொடுக்க முன் வருகின்றான். பேராசையே அவனது நோக்கம் என்பதை எடுத்துரைப்புக்கள் தெளிவாய்ச் சுட்டிக் காண்பிக்கின்றன (மத். 26:14, 15; மாற். 14:10, 11; லூக். 22:3-5; இ.வ. யோவா. 12:4-6). அன்பின் அளிப்பில் அற்பமாகக் குறை கண்டவன் மரியாளின் நன்றி நிறைந்த பலியில் மூன்றில் ஒரு பங்கான முப்பது வெள்ளிக் காசுகளுக்காகத் தனது எஜமானரை விற்றுப் போட்டான்.*

***5. புதன்கிழமை: புயலுக்கு முன் அமைதி.***—*இந்த புதன்கிழமையன்று நடந்த நிகழ்ச்சிகள் பற்றிப் பதிவேடு எதுவும் இருப்பதாகக் காணப் படுவதில்லை. நாம் இதன் காட்சிகளைக் கற்பனை செய்து கொள்ளும்படி விடப்படுகின்றோம்—நகரம் முழுவதும் அவர் ஏன் தேவாலயத்திற்கு வரவில்லை என்று வியப்புற்று கவனித்துக் கொண்டுள்ளது; மக்கள் (அவரது உரையைக்) கேட்பதற்கு ஆவலாய் இருக்கின்றனர், அதிகாரிகளோ அவருடைய இரத்தத்தின்மீது தாகமாய் இருக்கின்றனர். ஆனால் அவரது பணி செய்து முடிக்கப்பட்டாயிற்று. அவர் பெத்தானியில் தம் சீஷர்களுடன் தனிப்பட்ட வகையில் பேசிக் கொண்டு இருந்திருக்கலாம்; பெரும்பாலும்*

அவர் கடைசிக் காட்சிகளுக்காக அந்த நாளில் ஓய்ந்திருந்து, ஜெபம் நிறைந்த வகையில் தயாரிப்புகளை மேற்கொண்டிருக்கலாம். நாம் இவற்றை அறிவதில்லை. இரகசியத்தின் திரையானது அந்த நாளின் மீது கவிந்து அமர்ந்துள்ளது. “அந்த இரவில் அவர் இப்புவியின்மீது கடைசி முறையாகப் படுத்துறங்கினார். வியாழக்கிழமை காலையில் அவர் மீண்டும் ஒருக்காலும் உறங்காமலிருக்கும்படி துயில் நீங்கி எழுந்தார்.”

***6. வியாழக்கிழமை: கடைசி இராப்போஜனம்*** *(மத். 26:17-35;* யோவா. *13:1-17).*—வியாழக்கிழமையன்று ஏதோ ஒரு வேளையில் இயேசு பஸ்கா உணவை ஆயத்தப்படுத்தத் தமது சீஷர்களில் இருவரை நகருக்குள் அனுப்பினார். அந்த இரவில் அவர் பன்னிருவருடன் மீண்டும் ஒருமுறை பந்தி அமர்ந்தார்; ஏனெனில் யூதாஸ் இன்னும் அவரோடிருந்தான்—அவன் தோற்றத்தில் ஒரு சீஷனாக இருந்தான்; இருதயத்திலோ காட்டிக் கொடுப்பவனாக, ஒற்றனாக இருந்தான். அந்தச் சிறு குழுவினர் தங்களுக்குள் யார் முதன்மையானவர் என்று வழக்காடிக் கொண்டு தங்கள் இருக்கைகளில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கையில் அவர்கள் மீது ஒரு மேகம் கவிந்தது. அழகுமிக்க மற்றும் தகுதியான வழிமுறையாய் இருப்பினும் அது போலவே செய்ய மிகக் கடினமானதாக இருந்த வழிமுறையொன்றில் இயேசு அவர்களின் பேராவலைக் கடிந்து கொண்டார். மேஜையை விட்டு எழுந்த இயேசு ஒரு சாதாரண வேலைக்காரனைப் போல் அவர்களின் பாதங்களைக் கழுவத் தொடங்கினார், அவர் தாழ்மை மற்றும் ஊழியத்தின் பாடத்தை அவர்களின் இருதயங்களில் பதியச் செய்தார். “உங்களிலொருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான்”[6] என்று இயேசு கூறிய பொழுது இன்னும் இருளான மேகங்கள் கவிந்தன. யூதாஸ் விரைவிலேயே அவ்விடம் விட்டு அகன்றான்—மற்ற சீஷர்களோ அவன் ஏதோ உபகார ஊழியம் செய்வதற்காகச் செல்வதாக யூகித்தார்கள்; ஆனால் இயேசுவோ அவன் தனது இருளான திட்டத்தைச் செயல்படுத்தச் செல்வதை அறிந்திருந்தார். பின்பு இயேசு, தாம் எல்லாராலும் கைவிடப்படுவதை, தன்னம்பிக்கையுள்ள பேதுருவால் தாம் மறுதலிக்கப்படுவதை வெளிப்படுத்துகின்றார். பின்பு மேகங்கள் விலகுகின்றன, இயேசு அழகுமிக்க, நினைவுகூரும் வகையிலான இராப் போஜனத்தை ஏற்படுத்துகின்றார் மற்றும் யோவான் 14-16ல் உள்ள இணையற்ற உரையைத் தொடங்குகின்றார். அவர் உண்மையான கர்த்தரின் ஜெபத்துடன் தனது உரையாடலை முடிக்கின்றார் (யோவா. 17); இந்த ஜெபமானது விரிவான இதன் வட்டங்களில் அங்கிருந்த அவரது சீஷர்களையும் (அப்போஸ்தலர்களையும்), அவர்களின் வார்த்தையினால் அவர் மீது விசுவாசம் கொள்ளும் யாவரையும், மற்றும் உலகத்தையும் அரவணைக்கின்றது. எனவே, மென்மையான உரையிலும், இந்து உலகத்தையே அரவணைக்கும் ஜெபத்திலும் அந்த நாள் கழிந்து, நள்ளிரவின் நேரம் வரையிலும் தொடர்ந்தது. நிலவொளியில் அவ்வறையை விட்டுக் கடந்து வந்த இயேசு நகரத்தை விட்டு பெத்தானியின் திசை நோக்கித் தமது சீஷர்களுடன் நடக்கலானார்.

***7. கெத்சமெனே*** *(மத். 26:36-46).*—கெதரோன் என்று அழைக்கப்படும் பள்ளத்தாக்கின் கிழக்கு முனையில் ஒலிவ மலையின் அடிவாரத்தில்

கெத்சமெனே (எண்ணெய் பிழியும் இடம்) என்று அழைக்கப்பட்ட நன்கறியப்பட்ட ஒரு தோட்டம் அல்லது பழத்தோட்டம் இருந்தது. அது இயேசுவுக்குப் பிரியமான ஓய்விடமாய் இருந்தது. ஒலிவ மரங்களின் நிழல்களுக்குள் பிரவேசித்த அவர் தேர்ந்து கொள்ளப்பட்ட மூவரைத் தவிரப் பிறரை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு, ஜெபம் செய்வதற்காக தோட்டத்திற்குள் இன்னும் சற்றுத் தொலைவு சென்றார். அங்கு சமீபமாய் அம்மூவரையும் விட்டு விட்டு, அவர் நிழல்களினூடாக இன்னும் ஆழமாய் ஊடுருவிச் சென்று சொல்லவொண்ணாப் பெருந்துன்பத்துடன் தமது முகம் குப்புற (தரையில்) வீழ்ந்து கிடந்தார். அவர் "திகிலடையவும்,"[7] "மிகவும் வியாகுப்படவும்"[8] தொடங்கினார்; "மரணத்துக்கேதுவாக மிகவும் துக்க மடைந்தார்"[9]; "அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது"[10] அவருடைய உதடுகளிலிருந்து கீழ்ப்படுத்தும்/ மிகவும் பரிதாபமான கதறுதல் மும்முறை வந்தது, "என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக் கடவது"[11] அவர் மும்முறை அம்மூவரிடம் திரும்பி வந்து, அவர்கள் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார். இதெல்லாம் எதனை அர்த்தப்படுத்து கின்றது? அவரது முகத்திலிருந்து இரத்தம் வியர்வையாய் பெருகியதற்கும், அவரது உதடுகளிலிருந்து பெருந்துக்கத்தின் கதறுதல் வந்ததற்கும் அவரை பலவந்தப் படுத்திக் கொண்டிருந்த சரீரமான பயம் காரணமாயிருந்ததா? அப்படியிருந்தால் அவர் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட பல போர் வீரர்களைக் காட்டிலும், கொலை மேடையின்மீது அழைத்துச் செல்லப் படும் மிருகத்தனமான குற்றவாளிகள் பலரைக் காட்டிலும் குறைவான வீரம் உடையவராக அல்லவா இருந்திருப்பார்? இது வரையிலும் நாம் (ஆர்வத்துடன்) பின்பற்றி வந்த மகிமையுள்ள அவருடைய மனிதத்து வமானது கடைசியில் பரிதாபமிக்க அளவுக்குக் குறுகிப் போயிற்றா? இது யாவும் மிகவும் மேன்மையான அர்த்தம் கொண்டிருப்பதில்லையா? மிகவும் பலம் வாய்ந்த துக்கம் ஒன்று—உலகத்தின் பாவங்கள் மற்றும் துன்பங்கள் என்ற அளவிட முடியாத பாரம் ஒன்று—அவரைத் தரையில் இட்டு நசுக்கவில்லையா? இந்தக் காட்சியானது உயிரோட்டமற்ற யூகம் செய்ய இயலாத அளவுக்கு மிகவும் மென்மையான பரிசுத்தமுள்ளதாக இருக்கிறது. அவரது நோக்கம் பற்றிய அவரது முந்திய சொற்போர்கள் எல்லாவற்றிலும் போன்றே, இதிலிருந்தும் அவர் வெற்றிகரமாய் வெளி வந்தார் என்பதை மட்டும் நாம் அறிகின்றோம்: "தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு" (எபி. 5:7); "அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்" (லூக். 22:43).

குறிப்புகள்

[1]*மாற்கு 14:6-8. இந்த அபிஷேகமானது லூக். 7ல் காணப்படும் அபிஷேக நிகழ்ச்சியுடன் குழப்பப் படுத்தப்பட்டு விடக் கூடாது. இயேசுவின் ஊழியத்தில் அது முந்தியது; இது பிந்தியது; அது பரிசேயனான சீமோனின் வீட்டில் நடைபெற்றது; இது தொழுநோயாளியாயிருந்த சீமோனின் வீட்டில் நடைபெற்றது; அது மீட்கப்பட்ட ஒரு பெண்ணினால் செய்விக்கப்பட்டது; இது ஆவிக்குரிய ஆத்துமா கொண்ட மரியாளால் செய்யப்பட்டது; அதில் அப்பெண்ணின் ஒழுக்கக் கேட்டினிமித்தம் (பரிசேயனான) சீமோன் குறை கண்டார்; இதில் (தைலம்) வீணாக்கப்பட்டதன் காரணமாக யூதாஸ் குறை கண்டான். [2]யோவா. 12:24. [3]இவ்விடத்தில் டீன்* "wrought" *என்று எழுதினார். [4]மத். 23:13, 14, 15, 23, 25, 27, 29. [5]இவ்விடத்தில் டீன்* "durst" *என்று எழுதினார். [6]மத். 26:21; மாற். 14:18; லூக். 22:21; யோவா. 13:21. [7]மாற். 14:33; மேலும் மத். 26:37ஐயும் காணவும். [8]மாற். 14:33; மேலும் மத். 26:37ஐயும் காணவும். [9]மத். 26:38; மாற். 14:34. [10]லூக். 22:44.*

[11]*மத். 26:39, 42, 44; மேலும் மாற். 14:36, 39, 41; லூக். 22:42-46 ஆகியவற்றையும் காணவும்.*